## அத்தியாயம் 8

வருணுக்கும் கீதாவுக்கும் இடையே பேச்சுவார்த்தை நின்று போய் கிட்டத்தட்ட 2 மாதங்கள் கழிந்து விட்டது. வருண் எவ்வளவோ முயன்றும் அவனால் கீதாவை தொடர்பு கொள்ள இயலவில்லை. கீதாவோ வருண் என்ற ஒருவன் தன் வாழ்வில் வந்ததையே மறக்க விரும்பியதால் அவனது அழைப்புகளை ஏற்கவேயில்லை.

ஸ்ரீதேவியும் யோகாவும் வேறு ' நீ பேசலனா அவன் வேற ஒருத்தி கூட பேசி டைம்பாஸ் பண்ணிட்டு போய்ட்டே இருப்பான்..ரொம்ப அவன பத்தி யோசிச்சு நீ முட்டாளாகாத! " என்று சொன்னது வேறு அவள் மனதை மிகவும் பாதித்ததால் அவளும் அவ்வாறே அவனது அழைப்புகளை தவிர்க்க ஆரம்பித்துவிட்டாள். அவள் மறந்த விஷயம் இது தான். பொழுதுபோக்குக்காக பழகியவன் என்றால் வருண் அவனது குடும்பத்தினருக்கு அவளை அறிமுகப்படுத்த வேண்டிய அவசியம் இல்லையென்பது தான்.

அவனது அழைப்பை தவிர்த்தவளால் அவனது வாட்சப் ஸ்டேட்டஸ்களை பார்வையிடுவதை மட்டும் தவிர்க்க இயலவில்லை. அவன் வைக்கும் பெரும்பாலான ஸ்டேட்டஸ் அவனது கஸின்ஸ் பிறந்த நாள் அல்லது குடும்பத்தினரின் பிறந்தநாள் அல்லது திருமண நாளுக்காக மட்டுமே! அவனை தவிர்க்க முடிந்தவளால் அவனது கஸின்ஸையோ அவர்களின் அன்பான அழைப்புகளையோ தவிர்க்க இயலவில்லை. வருணை தான் அவள் மறந்தாலே தவிர அவனது தங்கைகளை அல்ல.

இன்றும் அனு மற்றும் பிரியாவின் 'அண்ணி' என்ற அழைப்பும் அவர்களின் செல்ல சண்டைகளும் அவளுக்கு பிடித்தமானதே□....

அவள் அவ்வாறு இருக்க , கீதா தன்னை எதற்காக தவிர்த்தாள் என்றே புரியாமல் தவித்தவன் முடியாமல் கீர்த்தியை அழைத்து கீதாவிற்கு ஏதும் பிரச்சனையா என்று கேட்க அவளோ சமீபத்தில் நியாஸால் கீதாவின் சீனியருக்கு ஏற்பட்ட பிரச்சனையை கூற வருண் பிரச்சனை முடிந்ததும் கீதாவே தன்னை அழைப்பாள் என்ற நம்பிக்கையில் அவளது வாட்சப் டிபியையும் அவளது முகநூல் போஸ்ட்களையும் பார்த்து நாட்களை கடத்தினான்.

இவ்வாறு இருக்கும் போது ஒருநாள் எதேச்சையாக கீதாவின் போனை எடுத்த ரியா அவளது வாட்சப்பில் இருந்த வருணின் ஷேட்களை பார்த்துவிட்டு ( அவர்கள் மூவரும் போனிற்கு பாஸ்வேர்ட் வைப்பது இல்லை) என்னவென்று யோகாவிடமும் ஸ்ரீதேவியிடமும் கேட்க அவர்கள் நடந்ததை கூற ரியாவிற்கு இவர்கள் ஏதோ குழப்பத்தில் இரண்டு நல்ல நண்பர்களை பிரித்துவிட்டனர் என்பதை மட்டும் தெரிந்து கொண்டாள்.

கீதாவிடம் இதை பற்றி பேச முடிவெடுத்தாள். உடனே அவினாஷிற்கு கால் செய்தாள்.

" என்ன டியர்□?? ஆச்சரியமா நீயே கால் பண்ணீருக்க?? என்ன பிரச்சன?" என்று கூலாக அவன் கேட்கவும் ரியா நடந்த விஷயங்களை கூறினாள்.

" சோ உன்னோட கீத்து பேபியோட பிராப்ளம சால்வ் பண்ண உன்னால மட்டும் தான் முடியும்□" என்று முடித்தாள்.

" ஓகே நான் இன்னும் ஒன் அவர்ல அங்க இருப்பேன்" என்று போனை கட் செய்தான்.

அவனிடம் பேசிவிட்டு வந்தவள் கீதாவை எங்கே என்று தேட அவளோ சீரியஸாக போனில் பேசிக்கொண்டிருந்தாள்.

" லிஸன் ஜேஸி! நீ இப்படி பேசுனா மறுபடி நான் உனக்கு கால் பண்ணவே மாட்டேன் மை டியர் சன்□"

மறுமுனையில் " நான் என்ன பண்ண மாம்? எனக்கு கண்ண மூடுனாலே அவ நியாபகமாவே இருக்கு.... முடியல மாம்□.." என்று கசந்த குரலில் பேசிக்கொண்டிருந்தான். ( மாம்னு சொன்னதும் சீரியஸா எடுத்துக்காதிங்க..அவன் அவள எப்போவும் இப்படி தான் கூப்பிடுவான் )

" ஏன் நீங்க பாய்ஸ் இவ்வளவு வீக்கா இருக்கிங்க□?? ஒரு பொண்ணு உன்ன வேணானு சொல்லிட்டா உன்னோட லைஃப் அதோட முடிஞ்சு போச்சா□?? பைத்தியம் மாதிரி பேசாம ஒழுங்கா எக்ஸாம்கு படி....செமஸ்டர் முடிஞ்சதும் சென்னைக்கு வா. அவி கூட ஷ்டே பண்ணீட்டே ஜாப் தேடு. இத மட்டும் மனசுல வச்சுக்கோ. தேவையில்லாத விஷயங்களை மைண்ட்ல போட்டு குழப்பிக்காம இரு. நான் போனை வைக்குறேன் .பை.. டேக் கேர்□" என்று சொல்லிவிட்டு திரும்பியவள் பின்னே நின்று கொண்டிருந்த ரியாவை

பார்த்துவிட்டு ஜேஸிக்கு நடந்த விஷயங்களை கூற அவள் பொறுமையாக கேட்டுவிட்டு அவினாஷ் வரப்போவதை கூற கீதாவை கையில் பிடிக்க முடியவில்லை. அவளது செல்ல நண்பன் வரப் போகிறான் அதுவும் இவ்வளவு நாள் கழித்து......

" ஹாய் கீத்து! உன்னோட ஆபிஸ் ப்ராப்ளம் எல்லாம் சால்வ் ஆயிடுச்சா? நியாஸ் என்ன சொல்லுறான்☺??" என்று கேட்டபடியே டேபிளில் இருந்த ஜக்கிலிருந்து தண்ணீர் குடித்தபடி கேட்டான் அவினாஷ்.

" அவன் இப்போதான் கொஞ்சம் தெளிவா யோசிக்க ஆரம்பிச்சிருக்கான் அவி !! ஆமா நீ எதுக்கு திடீர்னு என்ன பாக்க வந்திருக்க□? " என்று அவனை கேட்டு விட்டு ரியாவை குறுகுறுவென பார்த்தாள் கீதா.

" என்ன ஏண்டி இப்பிடி பாக்குற? உன் பாசமலர் தான் உன் கிட்ட பேசனும்னு சொன்னான்□" என்று அவனை மாட்டி விட்டாள் ரியா.

அவன் புறம் திரும்பிய கீதா " இங்க பாருங்க லவ் பேர்ட்ஸ்! நான் பொறுமையா கேக்குறப்போவே சொல்லிருங்க□. இல்லனா விளைவுகள் ரொம்ப மோசமா இருக்கும்□" என்று மிரட்டவே அவினாஷ் வருண் பற்றி கேட்க ஆரம்பித்தான். கீதாவும் நடந்த அனைத்தையும் அவனிடம் கூறி விட்டு " நான் அவன உன்ன மாதிரி ஜேஸிய மாதிரி ஒரு நல்ல ஃப்ரெண்டா நெனச்சேன் அவி□! பட் அவன் என் கூட டைம் பாஸுக்கு தான் பேசிருக்கான்□. இதுக்கு மேல யாருக்கும் டைம்பாஸா நான் இருக்க விரும்பல. ஸோ அவனோட கால்ஸ் அண்ட் மெசேஜஸ்கு ரிப்ளை பண்ணல□" என்று ஒருவித இறுக்கத்துடன் முடித்தாள்.

அவளை கூர்ந்து பார்த்த அவினாஷ் " கீத்து! அவன் உன் கூட டைம்பாஸுக்கு பழகிருக்கானு நீ தான் சொல்லுற. அப்படி பட்டவன் எதுக்கு அவனோட ஃபேமிலிய உனக்கு இன்ட்ரடியூஸ் பண்ணனும்□??? " என்று கேட்க கீதாவிற்கு அவன் கேட்பதற்கு பதில் சொல்ல தெரியவில்லை.

தொடர்ந்த அவினாஷ் " உங்க பிராப்ளம் அவங்க ஃபேமிலிக்கு தெரியுமா?" என்று கேட்க கீதா இல்லையென்று மறுத்தாள்.

" அவன் நெனச்சிருந்தா அவன் கஸின்ஸ் கிட்ட சொல்லி இனிமே உன் கூட பேச தேவையில்லனு சொல்லிருக்கலாம். பட் அவன் அப்படி பண்ணல. இதுல இருந்து என்ன தெரியுது?"

அவனே தொடர்ந்தான். " உன்ன அவன் கஷ்டப்படுத்த விரும்பல தென் அவன் உங்க ரிலேஷன்ஷிப் லைஃப்லாங் இருக்கணும்னு நெனைக்கிறான்□" என்று ஒரு ஃப்லோவில் சொல்லிவிட அதை கேட்டு " ரிலேஷன்ஷிப்பா?□" என்று அதிர்ந்தாள் கீதா.

அவளது ரியாக்ஷனை பார்த்த ரியா பக்கத்திலிருந்த அவினாஷின் காதில் " லுக்! அந்த வருண் இன்னும் கீத்து கிட்ட பிரபோஸ் பண்ணல□.பட் நீ சொல்லுற லெட்சணத்துல ப்ரபோஸ் பண்ணாமலே அவங்களுக்கு பிரேக் அப் ஆயிடும் போல□" என்று அவன் காதில் கடுகடுக்கவே உஷாரான அவினாஷ் " ரிலேஷன்ஷிப்பா□?? நான் ரிலேஷன்ஷிப்னா சொன்னேன்□?" என்று கீதாவை திருப்பி கேட்டான்.

" ஆமா....நீ அப்பிடி தான் சொன்ன அவி"

" நோ! நான் ஃப்ரெண்ட்ஷிப்னு சொன்னேன் கீத்து□. உன் காதுல அது ரிலேஷன்ஷிப்னு விழுந்திருக்கும். வேணும்னா ரியாவ கேளு□" என்று ரியாவை கை காட்ட அவளும் ஆம் என்றே தலையாட்ட ஒருவாறு கீதா வருண் விஷயத்தில் சமாதானமானாள்.

" பட் ஒன் கண்டிஷன்! நான் வருணுக்கு கால் பண்ண மாட்டேன்□. அவன் பண்ணுனாலும் என்னோட டவுட்ஸ் எல்லாம் கிளியர் பண்ணிட்டு தான் அவன் கூட பழயபடி பேசுவேன்□" என்று அவள் இறங்கி வர ரியா அவினாஷை பார்த்து சூப்பர் என்று கை காட்ட அவன் அவளை தோளோடு அணைத்துக் கொண்டான்.

அவர்களை பார்த்த கீதா " மை டியர் லவ் பேர்ட்ஸ்! இதே மாதிரி எப்போவும் இருங்க□..உங்களுக்கு யார் கண்ணும் பட்டுட கூடாது□" என்று திருஷ்டி கழித்தாள்.

இவ்வாறு நாட்கள் கடக்க கீதாவின் பிறந்தநாளும் வந்தது. இரவு பன்னிரெண்டு மணிக்கு அவளுக்கு சர்ப்ரைஸ் கிஃப்ட் கொடுத்தனர் யோகாவும் ரியாவும். அடுத்து வீடியோ காலில் அவினாஷ், விக்னேஷ், ஶ்ரீதேவி, ஜேஸி

என்று அவர்கள் பட்டாளம் வாழ்த்து சொல்லுகிறோம் என்ற பெயரில் லூட்டி அடித்துவிட்டு உறங்குவதற்குள் மணி இரண்டை தாண்டியது. காலை எழுந்து புத்தம் புது ஆடையில் கோயிலுக்கு செல்ல தயாரானவளோடு ரியாவும் யோகாவும் இணைந்து கொண்டனர்.

கோயிலில் சாமி கும்பிட்டு விட்டு அமர்ந்தவர்கள் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தவர்கள் கீதாவிற்கு வாட்சப்பில் மெஸேஜ் வரவும் என்னவென்று பார்த்தவள் ரேவதி என்று அறிந்ததும் புன்னகையுடன் பார்த்தாள்.

" ஹேப்பி பர்த் டே அண்ணி" என்று அவள் அனுப்பிய மெஸேஜை பார்த்ததும் அவளுக்கு நன்றி தெரிவித்து பதில் அனுப்பினாள். சிறிது நேரத்தில் அந்த கேங் முழுவதும் அவளுக்கு தனித்தனியாக வாழ்த்து அனுப்பினர்.

இதையே யோசித்தபடியே வீட்டிற்கு வந்து சேர்ந்தாள் கீதா. ரியாவும் யோகாவும் இன்று ஷ்பெஸலாக சமைக்க போவதாக கூறிக் கொண்டு கிச்சனை அதகளம் செய்து கொண்டிருந்தனர். கீதா அமைதியாக டிவி பார்க்க ஆரம்பித்தாள்.

காலையில் கண் விழித்த வருண் மொபைலில் மெஸேஜ்களை செக் செய்து கொண்டிருக்கையில் வாட்சப்பில் அவர்களின் ஃபேமிலி குரூப்பில் வந்த தகவலை பார்த்தவன் சிரித்து கொண்டே படுக்கையை விட்டு எழும்பினான்.

வாட்சப் ஸ்டேட்டஸ் வரிசையாக பார்த்துக் கொண்டே வந்தவன் அனுவின் " ஹேப்பி பர்த் டே அண்ணி என்ற கேப்ஷனுடன் இருந்த கீதாவின் புகைப்படத்தை பார்த்தவன் ஒரு நிமிடம் அப்படியே உறைந்து விட்டான்.

பின் அவசர அவசரமாக பால்கனிக்கு வந்தவன் கீதாவை அழைக்கலாமா வேண்டாமா என்று யோசித்தவன் பிறந்த நாளில் அவளை வாழ்த்தாமல் இருப்பது மிகவும் அபத்தமாக தோன்றவும் அவனின் விரல்கள் தானாக அவளது எண்ணை அழுத்த ஆரம்பித்தது.

டிவி பார்த்து கொண்டிருந்த கீதா திடீரென்று கால் வரவும் போனை பார்த்தவள் வருணின் முகம் ஸ்கிரீனில் தெரியவும் உற்சாகத்துடன் எடுத்தவள் " ஹலோ!" என்று சொல்ல நீண்டநாள் கழித்து அவளது குரலை கேட்டவன் அதன் இனிமையில் தன்னை தொலைத்தான்.

பின்னர் " ஹேப்பி பர்த் டே டியர்□. எப்போவும் நீ சந்தோசமா சிரிச்சிட்டே இருக்கணும்☺. உன்னோட ஆசை மாதிரியே எதிர்காலத்துல உனக்கு ஒரு பெரிய குடும்பம் கிடைக்கவும் அவங்களோட எல்லா அன்பும் உனக்கு முழுசா கிடைக்கவும் நான் என்னிக்குமே காட் கிட்ட ப்ரே பண்ணுவேன் கீத்து□ " என்று அடிமனதில் இருந்து காதலுடன் கூற கீதாவுக்கோ அவினாஷ் கூறியபடி வருண் தன்னை அழைத்ததில் ஆனந்தம்.

" தேங்க்யூ வருண். நான் இன்னிக்கு எவ்லோ ஹேப்பியா இருக்கேன் தெரியுமா□?? இன்னிகு மார்னிங் தான் எல்லாரும் எனக்கு கால் பண்ணாங்க வருண். எஸ்பெஷலி யுவர் கேங்! ஐ லவ் யூ கைய்ஸ்□" என்று சந்தோசத்தில் கூற அவனுக்கு அந்த ஐ லவ் யூ கேட்டதும் அவனுக்கு ரெக்கை மட்டும் இருந்தால் பறந்தே இந்தியா சென்றிருப்பான்.

அவனுக்கு பழையபடி கீதா பேசிய சந்தோசத்தில் தலையும் ஓடவில்லை காலும் ஓடவில்லை. அவள் வாய் ஓயாமல் பேசியதை மட்டும் சளைக்காமல் கேட்டு கொண்டிருந்தான்.

திடீரென்று அவள் " வருண் உனக்கு கீர்த்திய தெரியுமா□?" என்று கேட்க வருண் சாதாரணமாக " ஆமா நல்லா தெரியுமே கீத்து. நான் அவ கூடவும் டெய்லி பேசுவேன்□. வெரி குட் கேர்ள்" என்று மனதிலிருப்பதை மறையாது கூறவும் கீதாவுக்கு வருண் எனக்கு அவ்வளவா ஃப்ரெண்ட்ஸ் இல்லனு சொன்னது நியாபகத்துக்கு வந்தது.

" அவ கூடவும்னா?? இன்னும் நெறைய பேரு கூட பேசுவிங்க போல□" என்று வருவித்து கொண்ட சாதாரண குரலில் வினவினாள் கீதா.

" எனக்கு நெறைய ஃப்ரெண்ட்ஸ் இருக்காங்க. மேக்ஸிமம் ஒன் டேல 15 பேராச்சும் பேசுவாங்க" என்று சொல்லிக் கொண்டே போனான். தான் என்ன சொல்லுகிறோம் என்று அவனுக்கு புரியவில்லை.

" இவ்ளோ பேர் கூட எப்பிடி பேசுவ நீ??" உனக்கு போர் அடிக்காதா?"

" போர் அடிக்குனு தானே பேசுறதே. யூ நோ ஒன் திங் எனக்கு இப்படி பேசிட்டே இருந்தா டைம் போறதே தெரியாது□" என்று பதிலளிக்கவும் ஏனோ யோகாவும் ஸ்ரீதேவியும் கூறிய டைம்பாஸ் நினைவுக்கு வந்தது.

விரக்தியாக சிரித்தவள் " எல்லாமே உனக்கு டைம் பாஸ் தான வருண்□. பட் உன்ன மாதிரி ஃப்ரெண்ட்ஷிப்ப டைம்பாஸுக்கு யூஸ் பண்ண எனக்கு தெரியாது□" என்று கூறினாள்.

" கீத்து ஏன் இவ்ளோ சீரியஸ் ஆகுற நீ□??"

" நான் இப்பிடி தான் வருண். என்னால என்ன மாத்திக்க முடியாது. உன்ன மாதிரி எல்லா விஷயத்தையும் என்னால ஈஸியா எடுத்துக்க முடியாது□□"

" கீத்து இப்போ நீ தேவையில்லாம கோவப்படுறதா உனக்கு தோணல□?"

" என்னோட கோவம் என் கூடவே பொறந்தது வருண். என்ன பொறுத்தவரைக்கும் பொய் சொல்லுறவங்க , சீட்டிங் பண்றவங்கள விட கோவப்படுறவங்க ஒன்னும் மோசமானவங்க இல்ல□"

" ஓகே லிஸன். நான் சொல்லுறத கொஞ்சம் அமைதியா கேளு□"

" இம்பாஸிபிள். இதுக்கு மேல எதையும் கேக்க எனக்கு டைம் இல்ல□. உனக்காக நெறைய பேர் வெயிட் பண்ணுவாங்க□. ஐ மீன் ஃபார் யுவர் கால். சோ நீ அவங்க கூட பேசு□. பை. " என்று போனை கட் செய்து விட்டாள்.

வருணுக்கு முதல் முறையாக கீதாவின் மேல் கோபம் வந்தது. என்ன சொல்ல வருகிறென்று கூட கேட்க பொறுமையில்லா அவளது சிறுபிள்ளைதனம் அவனுக்கு எரிச்சலாக கூட இருந்தது. இனிமே தானாக அவளுக்கு கால் செய்ய கூடாது என்ற முடிவுக்கு வந்தான்.

அவனது இந்த முடிவால் அவளின் கோபமும், அவர்களின் நட்பில் வந்த விரிசலும் இன்னும் அதிகமாகும் என்பது தெரிந்திருந்தால் அவன் எப்பாடு பட்டாவது தடுத்திருப்பான்.